





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 27.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்









## இந்திய நிகழ்வுகள்

- ஜார்கண்ட் மாநில தலைநகரான ராஞ்சியில், காவல்துறை ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பானது **(Bureau of Police Research & Development)** ஜார்கண்ட் மாநில காவல்துறையுடன் இணைந்து இரண்டு நாள் மகளிர் காவல்துறைக்கான தேசிய மாநாட்டை **(National Conference of women in Police – NCWP)** நடத்தியுள்ளது.

- மகளிர் குழுக்கள் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றிற்கு இடையே ஒரு இடைமுகத்தை அளிப்பதன் மூலம் கிராமப்புற பெண்களுக்கு அதிகாரமளிக்க வழி செய்வதற்காக, **"சஷாக்ட் மகிளா"** என்னும் திட்டத்தை இமாச்சலப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - மேலும் இமாச்சலப் பிரதேச அரசு ஒரு குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாய் வரை பணமில்லா மருத்துவ சேவையை அளிக்கும் இமாச்சல் சுகாதார திட்டத்தை **(Himachal Health Care Scheme – HIMCARE)** செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

- பாகிஸ்தானின் கர்தார்பூர் பகுதியில் சீக்கியர்களின் புனித தலமான குருத்வாரா –விற்கு சீக்கியர்கள் எளிதாக செல்லும் வகையில் பஞ்சாபில் குருதாஸ்பூருக்கும், பாகிஸ்தானின் கர்தார்பூருக்கும் இடையே வழித்தடம் அமைக்க **இந்தியா மற்றும் பாகிஸ்தான் முடிவு** செய்துள்ளது.
  - அதன்படி, இருநாடுகளும் தங்களின் சர்வதேச எல்லைப்பகுதி வரை இவ்வழித்தடத்தை அமைக்கவுள்ளன.

## உலக நிகழ்வுகள்

- மாலத்தீவின் அமைச்சரவையானது **53 நாடுகள் உறுப்பினராக உள்ள காமன்வெல்த் அமைப்பில் மீண்டும் உறுப்பினராக இணைவதற்கு ஒப்புதல்** வழங்கியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 2016ஆம் ஆண்டு அக்டோபரில் மாலத்தீவின் அப்போதைய அதிபரான அப்துல்லா யாமீனின் ஆட்சியின் போது மாலத்தீவு காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது.
- **குறிப்பு :**
  - மாலத்தீவின் தற்போதைய அதிபர் - **இப்ராஹிம் முகம்மது**

சோலிக் ஆவார்

## விளையாட்டு நிகழ்வுகள்

- இந்தியாவின் **லக்னோவில்** நடைபெற்ற **சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில்** நடப்பு சாம்பியனான இந்தியாவின் **சமீர் வர்மா** சீனாவின் லு – குவாங்ஜீவை வென்று **சாம்பியன் பட்டம்** வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- விமானங்களின் தாமதம், பணம் திருப்பு செலுத்துதலில் உள்ள பிரச்சனை, நீண்ட வரிசை மற்றும் பயண உடைமைகள் காணாமல் போவது குறித்த **புகார்கள் போன்ற விமானப் பயணிகளின் புகார்களுக்கு தீர்வு காணும்** வகையில் **Airsewa 2.0** என்பதன் மேம்படுத்தப்பட இணையதளம் மற்றும் அலைபேசி செயலி **புதுடெல்லியில்** தொடங்கப்பட்டுள்ளது.
  - **2016** ஆம் ஆண்டு **நவம்பர் மாதம் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது** ஏர்சேவா இணையதளம் மற்றும் செயலியை **அறிமுகப்படுத்தியது** குறிப்பிடத்தக்கது.

## நியமனங்கள்

- இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையராக சுனில் அரோராவை ஜனாதிபதி **ராம்நாத் கோவிந்த்** நியமித்துள்ளார். **சுனில் அரோரா டிசம்பர் - 2** ஆம் தேதி தலைமை தேர்தல் ஆணையராக பதவியேற்க உள்ளார்.
  - ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த **சுனில் அரோரா** இந்தியாவின் **23-வது தலைமைத் தேர்தல் ஆணையராக** பதவியேற்க உள்ளார்.
- **குறிப்பு :**
  - **22-வது தலைமைத் தேர்தல் ஆணையர் - ஓம். பிரகாஷ் ராவத்.** தலைமைத் தேர்தல் ஆணையரை குடியரசுத் தலைவர் **சரத்து 324-ன்** படி நியமனம் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy TM

## பொருளாதார நிகழ்வுகள்

- **ஜம்மு – காஷ்மீர்** மாநில ஆளுநர் **சத்யபால் மாலிக்** தலைமையில் நடைபெற்ற மாநில நிர்வாகக் குழு கூட்டத்தில், **ஜம்மு – காஷ்மீர் வங்கியை பொதுத்துறை வங்கியாக நிர்வகிக்கும் முன்மொழிவுக்கு ஒப்புதல்** அளிக்கப்பட்டது. மேலும் அந்த வங்கியானது தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டது.
  - **1938 ஆம் ஆண்டு ஜம்மு – காஷ்மீர் வங்கி** தொடங்கப்பட்டது. தற்போது அந்த வங்கியில் ஜம்மு – காஷ்மீர் அரசு **59.3** சதவீத பங்குகளை வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- **இந்திய அரசியலமைப்பு சட்ட தினம் - நவம்பர் 26 (Indian Constitution Day)**
  - 1949 ஆம் ஆண்டு, நவம்பர் 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை, அரசியலமைப்பு சட்டமன்றம் **(Constituent Assembly),** ஏற்றுக் கொண்டதன் நினைவாக ஆண்டுதோறும் நவம்பர் 26 அன்று அரசியலமைப்பு சட்ட தினமாக (சாவித்வான் திவாஸ்) இந்தியாவில் கொண்டாடப்படுகிறது.
  - **2015 ஆம்** ஆண்டு நவம்பர் 26 ம் தேதி முதல் **“அரசியலமைப்பு தினம்”** இந்திய அரசால் கடைபிடிக்கப்படுகிறது.
- குறிப்பு :
  - **1950 ஜனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது** குறிப்பிடத்தக்கது.


We Shine Academy™